# இதழ்கள் – இயக்கங்கள் வழிப் புலனாகும் இலக்கிய வரலாறு
# (Literary History through Periodicals and Movements)

அ.எமிமாள்,
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்,
தரமணி, சென்னை – 103.

79

**வரலாற்றுப் பார்வை**

இலக்கிய வரலாறு எனும் தொடர் இரண்டு பொருண்மைகளைத் தருகிறது. இலக்கியத்தின் வரலாறா? இலக்கியங்கள் வழிப் புலனாகும் வரலாறா என்கிற இரண்டு பொருண்மை வேறுபாடுகள் நமக்குள் எழுகின்றன. பெரும்பாலும் இங்கு இலக்கிய வரலாறு எனும் பயன்பாட்டு முறையில் இலக்கியத்தின் வரலாறு என்றே பயிற்றுவிக்கப்பட்டுள்ளது. ஓர் இலக்கியத்தின் ஆசிரியர் , காலம், பொருண்மை போன்றவற்றை விளக்குவதைப் பொதுவான இலக்கியத்தின் வரலாறு எனும் தன்மையில் நாம் புரிந்துகொள்ளலாம்.

வழமையான இலக்கியங்களின் வரலாற்றில் காலனிய காலத்திற்குப் பின்பு குறிப்பாக அச்சு இயந்திரங்களின் வருகைக்குப் பின்பு நவீன இலக்கிய வடிவங்கள் தோன்றிப் பரவலாக்கப்பட்டன. மரபிலிருந்து புதுக்கவிதை , கட்டுரை ஆகிய இலக்கிய வகைமையை நோக்கி 20-ம் நூற்றாண்டு வீச்சோடு நடைபோட்டது. இவை பெரும்பான்மையாக இதழ்களின் வழியே சாத்தியமாயின. அவற்றிற்கு இயக்கம் சார் பின்புலங்களும் காரணமாயிருந்தன. இவ்வாறான சூழலில் குறிப்பாகத் திராவிட இயக்கங்களின் இலக்கியப் பங்களிப்பு அதன் வரலாற்றில் புறக்கணிக்கப்பட்டதாகவே அறிய முடிகிறது.

1. இதழ்கள் வழிப் புதுக்கவிதை வரலாறு கவனப்படுத்தப் பெறும் அளவிற்கு இயக்கங்கள் வழிப் புதுக்கவிதை வரலாறு கவனப்படுத்தப்படவில்லை.
2. இதழ்களை மையப்படுத்திப் புதுக்கவிதை அடைந்த வீச்சைக் கட்டுரை இலக்கியம் சென்றடையவில்லை.

எனும் இரண்டு கருதுகோள்களோடு இக்கட்டுரை ஆராய முற்பட்டு , பக்க வரையறை கருதி ‘இதழ்கள் வழிப் புதுக்கவிதை வரலாறு கவனப்படுத்தப் பெறும் அளவிற்கு இயக்கங்கள் வழிப் புதுக்கவிதை வரலாறு கவனப்படுத்தப்படவில்லை’ எனும் கருதுகோளை மட்டும் மெய்ப்பிக்க முற்படுகிறது.

**திராவிட இயக்கப் பகுத்தறிவு வாதம்**

இதழ்களின் வழியிலான புதுக்கவிதைகளின் வளர்ச்சி வரலாறானது மணிக்கொடி , எழுத்து, வானம்பாடி, இன்னும் பல இலக்கிய இயக்க வழிப்பட்ட வரலாறாகவே இருந்து வருகிறது. ஆனால் அரசியல் இயக்க வழிப்பட்ட புதுக்கவிதை வரலாற்றையோ அல்லது அவர்களின் மேடைப்பேச்சு , அரசியல் விழிப்புணர்வு உரையாடல்கள் , நவீன மொழிநடை ஆகியவற்றையோ புதுக்கவிதை வரலாற்றை எழுதுவோர் மருந்திற்காகக் கூடப் பேசுவதாகத் தெரியவில்லை. புதுக்கவிதை , படைப்பிலக்கியம் என்பதாகத் தனியே இயங்காவிடிலும் , புதுக்கவிதை குறித்து திராவிட இயக்கத்தினரின் பார்வை நேர்மறையாக இருந்து , பல்வேறு கவியரங்குகள் வழியாகவும் புதுக்கவிதைப் படைப்பாக்கங்களாகவும் ஊக்குவிக்கப்பட்டன.

தமிழ்ச் சமூகத்தில் திராவிட இயக்க இலக்கியங்களின் வகிபாகத்தை ( Role) மறுக்க இயலாதென்பது தொண்ணூறுகளில் தமிழக அறிவாண்மைகளிடம் செல்வாக்குப் பெற்றுள்ளது. பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் ஒருபுறம் ஜே.எம்.நல்லசாமிபிள்ளை , மனோன்மணீயம் சுந்தரம் பிள்ளை வழிப்பட்ட சைவ வேளாளப் போக்கும் , அயோத்திதாசர் வழிப்பட்ட தலித் – பௌத்தப் போக்கும், நீதிக்கட்சி

வழிப்பட்ட அரசுப்பணி , பதவித்தேட்டப் போக்கும் – பெரியாரின் சுயமரியாதை இயக்கத்திற்கு முன்னோடியாயின என்றாலும் திராவிட இயக்கத்திற்கே உரிய தனித்தன்மைகள் பல இல்லாமல் இல்லை.

கம்பராமாயணக் கட்டுடைப்பில் சைவப் புலவர்களைப் பயன்கொண்ட பெரியார் , பெரியபுராணக் கட்டுடைப்பிற்குக் கால்கோளிட்டபோது மறைமலையடிகள் முதலியோரால் தூற்றப்பட்டார். ஒப்பனையையும் நடிப்பையும் புனைவையும் இன்றியமையாததாகக் கொண்டத் திரைப்படம் போன்ற வடிவங்களையும் இயக்க நலன் கருதி , தனிநபர் நாகரிகம் கருதி , விதிவிலக்கான சூழல் தவிரப் பிறவற்றை பெரியார் ஏற்கவில்லை. இந்தப் போக்கு இலக்கிய அணுகுமுறைக்கு உகந்ததேயன்றிப் படைப்புக்கு எதிரானது. இவற்றை அடியொற்றியே திராவிட இயக்கப் பகுத்தறிவு வாதங்கள் இலக்கியப் பரப்பிற்குள் எதிரொளித்தன. அவை கவிதை , கட்டுரை இலக்கியங்களுக்குள்ளும் கையாளப்பட்டன.

**அண்ணாவின் உள்ளடக்க நவீனத்துவம்**

புதுக்கவிதைக்குத் தோற்றுவாயாக வசனக் கவிதையாகத் தொடங்கிய பாரதியைக் குறிப்பிடுகிற புதுக்கவிதை வரலாற்று ஆய்வாளர்கள் , திராவிட இயக்கம் சார்ந்த வசனக் கவிதைகளை , கவிதை பாடியவர்களைக் கிஞ்சித்தும் புதுக்கவிதை வரலாற்றில் இடம் பெறச் செய்யவில்லை என்பதை அறியமுடிகிறது. திராவிட இயக்கப் பாரம்பரியத்தில் பாரதிதாசன் , அண்ணா, கலைஞர் போன்றோர் இதுகுறித்து உரையாடியும் எழுதியும் வந்துள்ளனர். எழுத்தில் மட்டுமல்லாது தம் மேடைப் பேச்சுக்கள் வாயிலாகச் சமூக விழிப்புணர்வு நாடகங்களாக , கவிதைகளாகப் பேசியும் எழுதியும் வந்துள்ளனர்.

அண்ணாவின் நெஞ்சில் ஊற்றெடுத்த எண்ணங்கள் – உணர்ச்சிப்புயல்கள் 1937 முதற்கொண்டே இசைப்பாடல்களாக – வாழ்த்துப் பாக்களாக - இதழ் வாழ்த்து , பொங்கல் வாழ்த்தென – கதைப்பாடல்களென, அட்டைப்பட விளக்க ஓவியங்களென , அரசியல் அங்கதப் பாக்கள் என , போற்றிப் பாக்களென, மொழிபெயர்ப்புப் பூக்களெனத் தமிழ் இதழ்களில் வெளிவந்தன. (ப. ஆறுமுகம் , 2006:6-7)

அண்ணாவின் பிற ஆக்கங்கள் பேசப்பட்ட அளவிற்கு அவரின் கவிதைகள் தமிழ் இலக்கிய வெளியின் கவனத்திற்கு வரவில்லை. அதன் அரசியல் , சமூகச் செயற்பாடுகளுக்கு உறுதுணையாகவே தனது கவிதையாக்கங்களைப் படைத்தார். சாதி , மத, மூடநம்பிக்கை எதிர்ப்பு , வைதிக எதிர்ப்பு , பொருளாதார ஏற்றத்தாழ்வு எதிர்ப்பு , சமூக விடுதலை, பொருளாதார விடுதலை , அரசியலில் லஞ்சம் / ஊழல் எதிர்ப்பு, தனி மனித மேம்பாடு , காங்கிரசு எதிர்ப்பு ஆகியன அண்ணா கவிதைகளின் கருப்பொருள்களாகத் திகழ்ந்தன. மரபும் புதுமையும் , நாட்டார் வடிவத்திலும் , கும்மி, கதைப்பாட்டு போன்ற வடிவத்திலும் அவரது கவிதைகளில் மிளிர்ந்தன. சான்றாக:- பகுத்தாய்ந்து வாழ மனிதனுக்குக் கட்டளையிடும் அண்ணாவின் ஒரு கவிதை:

மனிதா!
நீ யாருக்கும் தலை வணங்காதே
நிமிர்ந்து நட!
கைவீசிச் செல்!
உலகைக் காதலி!
செல்வரை, செருக்குள்ளவரை
மதவெறியரைத் தள்ளிஎறி
மனசாட்சியே உன் தெய்வம்!
உழைப்பை மதி, ஊருக்குதவு
உனக்கு எட்டாத கடவுளைப் பற்றிப் பிதற்றாதே!
சிந்தனை செய்! செயலாற்று! (திராவிட நாடு, 12.6.55)

இதழ் வழியான புதுக்கவிதை வளர்ச்சி உருவான அதே காலக்கட்டத்தில் தான் இந்தத் திராவிட இயக்க வசனக் கவிதைகள் உருவாகியுள்ளன. பாரதியாருக்குப்பின் ந.பிச்சமூர்த்தி , மணிக்கொடி எனத்

தொடங்கும் புதுக்கவிதை வரலாற்றில் திராவிட இயக்கத்தினரின் பங்களிப்பு தவிர்க்கப்பட்டதாகவே புரிந்துகொள்ள முடிகிறது.

1930-களின் பின்பகுதியில் பல்கலைக்கழகக் கல்வியில் சிறப்புறத் தேறிய அண்ணா , நீதிக்கட்சி தொடர்பு வழியே பெரியாரைச் சார்ந்தார். பரந்த அறிவும் , படிப்புப் பழக்கமும், இரு மொழித்திறனும் மிக்க அண்ணாவுக்கு மேலை இலக்கியத்தொடர்பு இருந்ததில் வியப்பில்லை. அவர் 1937 முதலே வசனக்கவிதை எழுத முயன்றவர் என்பதைச் சிற்றிதழ்க் குழுவினர் சுட்டிக் காட்டியதாகத் தெரியவில்லை (பா.மதிவாணன் , 2000:145) எனும் கருத்தை இங்கு கவனப்படுத்துவது தவிர்க்கப்பட்ட நிகழ்வை மேலும் உறுதிசெய்கிறது.

**பாரதிதாசன் கவிதை மரபினர்**

புதுக்கவிதை வரலாற்று ஆசிரியர்கள் அமெரிக்க வால்ட் விட்மன் , பாரதியின் வசனக் கவிதை வழியிலான வரலாற்றையே புதுக்கவிதைகளின் தோற்றுவாய்க்கு வழங்கி வந்தனர். ஆனால் மிகச்சரியாக , பாரதிக்குப் பிறகு வந்த பாரதிதாசனின் வசனக் கவிதை குறித்து அல்லது அவரது வழிவந்த கவிதை மரபினரின் புதுக்கவிதை வளர்ச்சி வரலாற்றுப் பங்களிப்பு குறித்து எந்தப் புதுக்கவிதை வரலாற்று ஆசிரியர்களும் கல்லூரி , பல்கலைக்கழக ஆய்வு வட்டத்திலும் , ஆசிரியர் வட்டத்திலும் உரையாடல் நிகழ்ந்ததாகச் சான்றுகளில்லை. எனவே அவற்றை வெளிக்காட்டுவதே இப்பகுதியின் நோக்கமாகிறது. இதில் திராவிட இயக்கப் பகுத்தறிவுவாதத்தின் பங்கும் அளப்பெரியது.

மணிக்கொடி, எழுத்து, கசடதபற மற்றும் மேலும் இதழ்கள் வழியாகப் புதுக்கவிதைகள் வளர்த்தெடுக்கப்பட்டாலும் அதன் இன்றைய நிலை என்பது முடங்கிய ஒன்றாகத்தான் உள்ளது. ஆனால் இயக்கம் சார்ந்து பகுத்தறிவுவாதம் பேசிய திராவிட இயக்கத்தினரின் இதழ்கள் இன்றுவரை புதுக்கவிதைகளை வெளியிட்டு வருகின்றன. இதற்குச் சிறந்த சான்றுகள்: உண்மை , நிமிர்வோம், சிந்தனையாளன், நந்தன்வழி, குடியரசு போன்ற இதழ்கள் தற்போது வரைப் புதுக்கவிதைகளுக்கு இடமளித்து வளர்த்து வருகின்றன. குறிப்பிட்டுச் சொல்ல வேண்டுமென்றால் , என் முந்தானையை மதத்தோடு முடிச்சிட்டது யார்? என்கிற தலைப்பில் கவிஞர் வைரமுத்துவின்,

"சொல்லுங்கள்
என்
முந்தானையை மதத்தோடு
முடிச்சிட்டது யார்?
ஜாதி சிலுவையில் என்
தங்க தேகத்தை
அறைந்து போனது யார்" (நிமிர்வோம் இதழ்: 2018, ஜனவரி)

எனும் கவிதையைச் சுட்டலாம்.

பாவேந்தருக்குப் பின் தோன்றியுள்ள எந்தக் கவிஞரும் தமிழைப் போற்றிப் பாடாதிருக்க இயலாது என்று சொல்லுமளவுக்கு , புரட்சிக்கவிஞரின் தமிழ்ப்பற்று எனும் கருப்பொருள் தமிழகத்தில் தனிப்பெரும் செல்வாக்குப் பெற்றுவிட்டது. பகுத்தறிவுக் கவிஞர்களில் சிறப்பிடம் பெற்று விளங்குகிறவர் புலவர் குழந்தை அவர்கள். அவரின் தாய்மொழிப்பற்று சிறப்பானது.

"வெட்டியேயெனை வீழ்த்தி னுங்குருதி
விதிர வேயரும் புண்ணிலே
வீழும் போழ்தினும் தமிழ்தமிழென
வீழுவேன் தமிழ் மண்ணிலே"

எனும் பாடலடிகளே இதற்குச் சான்றாகும்.

பாவேந்தர் வழித்தோன்றலான கவிஞர்களுள் முடியரசன் அவர்களும் ஒருவராவர். அவர் 'மொழிக்கொரு காப்பியம் ' என்று சொல்லித் தமிழ்மொழிக்காகப் 'பூங்கொடி' எனும் காப்பியத்தைப் படைத்தளித்தார்.

எங்கள் தமிழ்மொழியே! - உயிரே!
இங்குனை நாங்கள் இகழ்ந்ததினாலே
இழிநிலை அடைந்தோம் உரிமையும் இழந்தோம்
தமிழ் வாழ்க என்று சொன்னால்
குடிமூழ்கிப் போகுமோ? இங்கு
அமிழ்தம் கசக்குமோ? தென்றல் கொதிக்குமோ?

இக்காலக்கட்ட நெடுங்கதைகளை, சிறுகதைகளை, நாடகங்களை, பாட்டுக்களைப் பட்டியலிடலாம் என்றாலும் படைப்பு சார்ந்து கருதத்தக்கது எள்ளல் , அங்கதம் எனும் சுவையே ஆகும். எம்.ஆர்.ராதா , திருவாரூர் தங்கராசு போன்றோரின் நாடகங்கள் எள்ளலோடு வைதிகத்தைக் கட்டுடைப்புச் செய்தன. இதழியலில் குத்தூசி குருசாமியின் எழுத்துகள் விதந்து கூறத்தக்கவை. இவரது 'பலசரக்கு மூட்டை ' எடுத்துக்காட்டானதொரு தொகுப்பாகும். கல்கி அளவிற்குப் பேசப்பட வேண்டியவர் குத்தூசி. கவிதையுலகில் பாரதிதாசனின் பங்களிப்புக் குறிப்பிடத்தக்கது.

பாரதிதாசனின் இரண்டாவது தொகுதியிலுள்ள 'காதல் வாழ்வு ' எனும் படைப்பு அவரது வசனக் கவிதை முயற்சியைக் காட்டும். மணிக்கொடியின் ஒரு பரிமாணத்தை மட்டும் காட்டி உரிமை கொண்டாட முந்துகிற பலர் அதில் பாரதிதாசன் கவிதைகள் கணிசமாக இடம் பெற்றிருப்பதைக் குறிப்பிடுவதில்லை. (பா. மதிவாணன் , 2000:145-146) இக்கருத்து தமிழ்ப் புதுக்கவிதை வரலாற்றை மீளவும் வரலாறாக எழுத வேண்டிய தேவையை உணர்த்துகிறது.

அதேபோல,

"... பெண்கள் வருகை
கண்டு பீதியில் பேதியாவது
அய்யப்பனா?
அய்யப்ப பக்தனா?
ஆச்சார போர்வைக்குள்..."

(நிமிர்வோம் இதழ், 2018, அக்டோபர், முல்லை வேந்தன் பெரியார்)

என்று தொடர்ந்து வெளியிட்டு வருகிறது.

இவ்வாறு கலைஞரின் புதுக்கவிதைகளைக் கூட உண்மை இதழ் தற்போது வரை மறுவெளியீடு செய்து வருகிறது. 1974-இல் கவியரங்கில் அவர் படித்த

"... ஒரு குலத்துக்கொரு நீதி கடைப்பிடித்தால்
சகிக்குமா பெரியார் மனம்? சமருக்கு வில் வளைத்தார்
சரித்திரம் படைக்கலுற்றார்..."

(உண்மை இதழ், 2019, ஆகஸ்ட், கலைஞர் கருணாநிதி)

எனும் கவிதையைச் சான்றாகக் காட்டலாம்.

இவ்வாறெல்லாம் அன்று தொட்டு இன்றுவரைப் புதுக்கவிதைக்குப் பங்களிப்பு செய்துவரும் திராவிட இயக்க மரபினரைப் புறக்கணித்து வரலாறு எழுதியமை வியப்பாக உள்ளதையே கண்டுணர முடிகிறது.

**கலைஞரின் கவிதைவெளி**

அண்ணாவைத் தொடர்ந்து கலைஞரின் கவிதைவெளி , புதுக்கவிதை வரலாற்றில் சிறப்பானது. அவரின் மேடைப்பேச்சுக்கள், அவர் நடத்திய கவியரங்குகள் போன்றவை புதுக்கவிதையின் சாத்தியங்களை மேலும் விசாலமாக்கின.

"1945-ஆம் ஆண்டு முதல் நான் எழுதிய கவிதைகளையும் கவியரங்குகளுக்குத் தலைமையேற்றுப் பாடிய கவிதைகளையும் தமிழ்க்கனி பதிப்பகத்தினர் அழகுறத் தொகுத்துப் படைத்துள்ளனர் ..."

‘கவிதையல்ல’ என்ற தலைப்பிலேதான் தொடக்கத்தில் எழுதிக் கொண்டிருந்தேன். கவிதை இலக்கணத்திற்குள் என்னைக் கட்டுப்படுத்திக் கொள்ளமுடியவில்லை. 1967-ஆம் ஆண்டு அமைச்சர் பொறுப்பேற்ற பிறகு அந்தப் பணியில் ஏற்பட்ட களைப்பினைப் போக்குவதற்குக் கவியரங்குகளே எனக்கு இளப்பாறும் இன்சோலைகளாயின…”

“கற்பனைகள், உணர்ச்சி பெற்றுக் கவிதைச் சொற்களாகப் பாய்ந்திடும் போது இலக்கணக் கட்டுப்பாடு எனும் கடிவாளத்தை என்னால் பயன்படுத்த முடியவில்லை. அது என் பலவீனம்தான்! ” (மு.கருணாநிதி, என்னுரை, 1995:IV) எனும் கூற்று புதுக்கவிதையின் வரையறை பற்றிய உரையாடலுக்கு மிக நெருக்கமானது.

1945-இல் இருந்து கவிதை எழுதத் தொடங்கியதாக , கலைஞர் கருணாநிதியே சுட்டுகிறார். இலக்கணக் கட்டுப்பாடற்ற நெகிழ்ச்சியான மரபுசார் கவிதைகளைப் படைத்து வந்தார் கலைஞர். கலைஞரின் கவிதைகளைப் பற்றி மு.மேத்தா குறிப்பிடுகையில் , அவரது கவிதைகள் மரபும் அல்ல ; புதியதும் அல்ல ‘புதுமரபுக் கவிதைகள் ’ என்கிறார். மேலும் , கலைஞரின் கவிதைகள் யாப்பு , எதுகை, மோனை என மரபுக் கவிதைகள் போன்று அனைத்து இலக்கண நயமும் பொருந்தி இருக்கும். அதே சமயம் புதுமைகளைப் புகுத்த மரபைத் தனக்கு ஏற்ப வளைத்துக் கொள்ளவும் கலைஞர் தயங்கவில்லை.

பெண்ணுரிமை சார்ந்த கலைஞரின் சிந்தனை சிறப்பானது. 1985-ஆம் ஆண்டு ஆனந்த விகடனில் வெளிவந்த யாரோ ஒரு கவிஞரின் ஒரு கவிதை …

விதவை என்று எழுதுகிறேன்
எழுத்தில் கூடப் பொட்டு
வைக்க முடியவில்லை…
சமுதாயம் மட்டுமல்ல
மொழியும் உங்களை
வஞ்சித்து விட்டது

இந்தக் கவிதையைப் படித்த கலைஞர் , ‘விதவை’ என்பது வடமொழிச் சொல். தமிழ் மொழியில் ‘கைம்பெண்’ என்று எழுதினால் ஒன்றுக்கு இரண்டு பொட்டு வைக்கலாம். தமிழ் வஞ்சிக்காது வாழ வைக்கும் என்று தமிழைக் குறித்தும் கைம்பெண்கள் குறித்தும் பேசினார்.

கலைஞரின் கவிதைவெளி மிகப் பரந்துபட்டது. சமூக நீதி , சாதியொழிப்பு சார்ந்த அவரின் படைப்புகள் மிக ஆழமான வீச்சை உடையவை ; இலக்கியச் சீற்றம் கொண்டவை. பெரியார் , அண்ணா, கலைஞர் வழித்தோன்றலாக வந்த திராவிட இயக்கத்தினர் தம் மேடைப் பேச்சுக்கள் வழியே புதிய மொழிநடையை உருவாக்கினர். எழுதினால் அவை புதுக்கவிதையே ; மறுநாள் அந்தப் பேச்சுக்கள் இதழ்களில் பதியப்படும்போது புதுக்கவிதையின் சாயலை அதில் காணமுடியும். சிறப்புக்குரிய புதுக்கவிதைகள் என்று சொல்லுமளவிற்கு அவர்களின் மேடைப்பேச்சுக்கள் , எழுத்துகள் புதுக்கவிதைகளாகவே மிளிர்ந்தன என்பதை மறுக்க முடியாது.

**மீள் உருவாக்கம்**

புதுக்கவிதை வரலாறு இவ்வாறிருக்க அதை மறு வரையறை செய்ய வேண்டியது காலத்தின் கட்டாயமாகிறது. ஏனெனில் இயக்க – இதழ்வழிப்பட்ட புதுக்கவிதை வரலாறு என்பது குறிப்பிட்ட இதழ்களின் பெயரில் காலவரிசையில் வரையறுக்கப்படும் போது பிற இயக்கங்கள் சார்ந்த அல்லது சாராதவர்கள் எதுவுமே பங்களிப்பு செய்யவில்லை எனும் பொருண்மை ஏற்பட்டு விடுகிறது. எனவே புதுக்கவிதை வரலாறு மறுவரையறை செய்யப்பட்டு மீளுருவாக்கம் செய்யப்பட வேண்டும்.
அதேபோல, கட்டுரை இலக்கியம் என்பதில் தலித் இயக்க நோக்கில் அயோத்திதாசரின் இதழில் வெளிவந்த கட்டுரைகள், விடுதலை இயக்கப் பார்வையில் பாரதியார் கட்டுரைகள் , தனித்தமிழ் இயக்கப் பார்வையில்

மறைமலையடிகளார், பாவாணர், பெருஞ்சித்திரனார் கட்டுரைகள் , திராவிட இயக்கப் பின்னணியில் பெரியார், பாரதிதாசன், அண்ணா, கலைஞர் போன்றோரின் கட்டுரைகள் இலக்கிய வரலாற்று ஆசிரியர்களால் கட்டுரை இலக்கியம் என்கிற வரையறைக்குள் வைக்கப்படவில்லை என்பதும் ஆய்வுக்குரியது.